பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 13 திங்கட்கிழமை 27.06.2022 கதிர் 125

## சிறுமியைச் சீரழித்த 59 வயது நபர் கைது

### இளவாலையில் சம்பவம்

யாழ்., இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 6 வயது சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த 59 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் தாயார் நிகழ்வு ஒன்றுக்குச் சென்றிருந்த நேரம் பக்கத்து வீட்டு நபர் ☞2

## ஆஸி. செல்ல முற்பட்ட மேலும் 54 பேர் கைது

ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகச் செல்ல முற்பட்ட 54 பேர் மட்டக்களப்பு - பாலமீன்மடு கடற்பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இன்று அதிகாலை கடற்படையினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதானவர்கள் திருகோணமலை துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

## இவ்வருடம் இதுவரை 453 பேர் சிக்கினர்

2022ஆம் ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் இலங்கையிலிருந்து சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற 453 பேர் பொலிஸார் மற்றும் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேற முயல்வோரிடம் இருந்து 2 லட்சம் ரூபா முதல் ☞2



## ராஜபக்ஷ குடும்பத்தினர் போல்

# பொய் வாக்குறுதி வழங்கும் 'படுமுட்டாள்' நான் அல்லன்!

## பிரதமர் ரணில் திட்டவட்டம்



**இலங்கையில் கடந்த தேர்தல் காலங்களில் ராஜபக்ஷ குடும்பத்தினர் வழங்கிய பொய் வாக்குறுதிகளால்தான் நாடு இன்று மோசமான பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. நானும் அவர்கள் போல் பொய் வாக்குறுதிகளை வழங்கி 'படுமுட்டாள்' என்ற பெயரைக் கேட்க விரும்பவில்லை.**

**- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.** ☞2

## தனுஷ்கோடி சென்ற தம்பதி மயங்கிய நிலையில் மீட்பு!



(மன்னார் நிருபர்)

இலங்கையில் இருந்து படகு மூலம் தனுஷ்கோடி சென்ற வயதான தம்பதியர் கடற்கரையில் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டனர். ☞2

### இலங்கை போக்குவரத்துச் சபையின்

## வட பிராந்திய ஊழியர்கள் புறக்கணிப்புப் போராட்டம்



பணிக்குச் சென்று திரும்புவதற்குத் தமக்குப் பெற்றோல் வழங்கக் கோரி இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய ஊழியர்கள் ☞2

## '21' சட்டமூலத்தின் இறுதி நகல் இன்றைய அமைச்சரவையில்!

### அங்கீகாரம் கிடைத்ததும் வர்த்தமானியில் பிரசுரம்



அரசமைப்புக்கான 21ஆவது திருத்தச் சட்டமூலத்தின் இறுதி நகல் இன்று மாலை அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளது. இதற்கு அமைச்சரவையில் அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு அமைச்சரவை அனுமதி கிடைத்ததும் அதனை இன்றிரவு வர்த்தமானியில் பிரசுரிக்கவுள்ளதாக நீதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. ☞2

## 'கொரோனா'வின் புதிய திரிவு கண்டுபிடிப்பு; ஏனைய வைரஸ்களைவிட வேகமாகப் பரவும்

### 63 நாடுகளில் வேரூன்றியுள்ளது என வைத்திய நிபுணர் சந்திம எச்சரிக்கை



கொரோனா வைரஸின் புதிய திரிவு அடையாளம் காணப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளரும் வைத்திய நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கையினுள் புதிய வைரஸ் எதுவும் கண்டறியப்படவில்லை என அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், 'பி.ஏ. 5' என்று பெயரிடப்பட்ட இந்த வைரஸை மிகுந்த ☞2

## நாட்டுக்காகப் போராடியவர்கள் சிறைச்சாலைக்குள்; வன்முறையைத் தூண்டிய ராஜபக்ஷக்கள் வெளியே!

### இந்தக் கையாலாக அரசை விரட்டியடிப்போம் என்று சஜித் அறைகூவல்



காட்டுமிராண்டித்தனத்தையும் வன்முறையையும் உருவாக்கிய ராஜபக்ஷக்களும் கும்பலும் இப்போது சுதந்திரமாக நடமாடுகின்றனர். இந்நாட்டு மக்களுக்காக சிறந்த எதிர்காலத்தை வேண்டி போராடிய மக்கள் இன்று சிறையில் அடைக்கப்பட்ட வண்ணமுள்ளனர்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்டக்காரர்களை - சிறைச்சாலைக்கு நேற்று நேரில் ☞2

## மட்டக்களப்பில் எரிபொருளுக்காக காத்திருந்தவர்கள் மீது பஸ் மோதல்

### ஐவர் படுகாயம்; 5 மோ. சைக்கிள்கள் சேதம்



மட்டக்களப்பு - ஊறணிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 5 பேர் படுகாயமடைந்துள்ளமையுடன், 5 மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்துக்கு முன்னால் இன்று காலை வரிசையில் ☞2

## ‘21’ சட்டமூலத்தின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தேச சட்டமூலத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் நீக்கப்பட்டு பிரதமர் உள்ளிட்ட நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்கள் மாற்றப்படுவதோடு பிரதமரின் ஆலோசனையுடனே ஜனாதிபதி அனைத்து விடயங்களையும் எடுக்க வேண்டும் எனவும் முன்மொழியப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை இல்லாதொழிக்கவும் பிரேரிக்கப்பட்டுள்ளதோடு சர்வஜன வாக்கெடுப்பு இன்றி நாடாளுமன்றத்தில் மாத்திரம் நிறைவேற்றப்படக்கூடிய திருத்தங்களே இந்த சட்டமூலத்தினூடாக முன்வைக்கப்பட்டுள்ளன என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அரசமைப்பின் 21 ஆவது திருத்த யோசனை தனிநபர் பிரேரணையாக ஐக்கிய மக்கள் சக்தியால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டது. இது தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு கடந்த வாரம் சபாநாயகரினால் சபையில் அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் 21 ஆவது திருத்த யோசனை அண்மையில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பில் ஏனைய கட்சிகளுடனும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நாடாளுமன்ற குழுக்களுடனும் சிவில் அமைப்புகளுடன் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கடந்த நாள்களில் ஆராய்ந்தார்.

இதன்படி திருத்த நகலில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்த திருத்தமும் இதில் உள்ளடக்கப்பட்டது என அறிய வருகின்றது. இந்த யோசனை சட்டமா அதிபர் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டு புதிய நகல் சட்டமூலம் தயாரிக்கப்பட்டது என நீதி அமைச்சு தெரிவித்தது.

இந்தநிலையில் இறுதி சட்ட நகல் நீதி அமைச்சரால் இன்று மாலை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது என அரச வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்படும் என நம்பகரமாகத் தெரியவருகின்றது. அதன் பின்னர் இன்றிரவு இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## நாட்டுக்காகப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று சந்தித்து, சுகநலம் விசாரித்த எதிர்க்கட்சித் தலைவர், அதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போராட்டத்தின் நோக்கங்கள் இன்னும் உயிர்ப்புடன் இருக்கின்றன. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பன அந்த நோக்கங்களுடன் மாற்றமின்றி பயணிக்கின்றன.

காட்டுமிராண்டித்தனமான ராஜபக்ஷ வாதம் மற்றும் அரச பயங்கரவாதம் என்ற இரண்டையும் நிராகரிக்கின்றோம்.

வன்முறையைத் தூண்டிய ராஜபக்ஷக்கள் வெளியே. ஆனால், நாட்டுக்காகப் போராடியவர்கள் உள்ளே. இந்த அணுகுமுறையை அனுமதிக்க முடியாது.

இந்தக் கையாலாக அரசு ஜனநாயக வழியில் விரட்டியடிக்கப்படும். அதற்கான அரசியல் தலைமைத்துவம் எம்மால் வழங்கப்படும். அரசைத் தெரிவு செய்வதற்கான உரிமை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் - என்றார்.

## மட்டக்களப்பில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரித்திருந்த வாகனங்கள் மீது வீதியில் பயணித்த தனியார் பஸ் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

செங்கலடியிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## ‘கொரோனா’வின் புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதானத்துடன் பரிசோதித்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இந்தப் புதிய வைரஸ் 63 நாடுகளில் பதிவாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தவைரஸ் ஏனையவைரஸ்களைவிட வேகமாகப் பரவுகின்றது எனவும், முந்தைய கொரோனா வைரஸின் திரிவுகளை விட அதிகமாகப் பரவுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தென்னாபிரிக்காவில் கொரோனா வைரஸின் புதிய வகையும் கண்டறியப்பட்டுள்ளது. இது பி.1.1.529 எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் வேகமாகப் பரவி நோய் எதிர்ப்பு சக்தியை பலவீனப்படுத்துவதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உலக சுகாதார விஞ்ஞானிகள் இன்னும் வைரஸ் குறித்து ஆய்வு செய்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சூழலில் ‘பி.ஏ. 5’ வைரஸ் புதியதொரு திரிவாக உருவெடுத்துள்ளது.

## வட பிராந்திய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்திருந்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம் இன்று தொடர்கின்றது.

இது தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய ஊழியர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண ஆளுநரும் யாழ். மாவட்ட அரச அதிபரும் வாக்குறுதி வழங்கிய நிலையில் போராட்டம் கைவிடப்படுகின்றது என சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன. அந்தச் செய்திகளில் உண்மையில்லை.

நாங்கள் தொடர்ந்தும் எமது போராட்டங்களை முன்னெடுத்துள்ளோம். தூர தேசங்களிலிருந்து வருபவர்கள் குறித்த நேரத்துக்குள் அலுவலகத்தைச் சென்று சேர முடியாமையால் எங்கள் வரவு கூட விடுப்பாகவே கருதப்படுகின்றது.

தனியார் பஸ் உரிமையாளர்கள் புறக்கணிப்பு மேற்கொண்டால் உடனடியாகவே அதிகாரிகள் தலையிட்டு அவர்களுக்குத் தீர்வு வழங்குகின்றார்கள்.

ஆனால், கொரோனாக் காலத்திலும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கரிசனை கொள்வதில்லை. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமக்குக் பெற்றோல் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் - என்றார்.

## தனுஷ்கோடி சென்ற .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக பலர் அகதிகளாகத் தமிழகம் சென்றுள்ளனர்.

இந்தநிலையில், திருகோணமலை பகுதியில் இருந்து படகு மூலம் சென்ற வயதான இருவர் (தம்பதி) இன்று அதிகாலை இராமேஸ்வரம் அருகே உள்ள தனுஷ்கோடி கடற்கரையில் இறங்கினர்.

இவர்கள் இருவரும் மயங்கிய நிலையில் கடற்கரையில் சுருண்டு விழுந்து கிடந்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த கடலோரப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மயக்க நிலையில் இருந்த அவர்களை மீட்டு அம்புலன்ஸ் மூலம் அரச மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

இவர்களுக்கு மருத்துவமனையில் வைத்தியர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கடலோரப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இவ்வருடம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10 லட்சம் ரூபா வரையான பணத்தை ஆட்கடத்தல்காரர்கள் பெற்றுக்கௌள்கின்றனர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆட்கடத்தல்காரர்கள் பழுதடைந்த படகுகளையும் உடைந்த படகுகளையும் சட்டவிரோத நடவடிக்கைகளில் பயன்படுத்துகின்றனர் என்றும், இதன் மூலம் உயிராபத்துக்கள் அதிகம் ஏற்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கடத்தல்காரர்களுக்கு 1 முதல் 5 வருடங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எச்சரித்துள்ளார்.

## சிறுமியைச் சீரழித்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமியை அறைக்குள் அழைத்துச் சென்று துஷ்பிரயோகம் செய்தார் என்று பாதிக்கப்பட்ட சிறுமி தாயிடம் தெரிவித்துள்ளார்.

தாயார் இந்த விடயம் தொடர்பில் இளவாலைப் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியின் வாயைப் பொத்தி வீட்டுக்குள் அழைத்துச் சென்ற குறித்த நபர், சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்தார் என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறுமி சட்ட வைத்திய பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## பொய் வாக்குறுதி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

‘நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு இவ்வருடத்துக்குள் தீர்வு கிடைக்குமா?’ என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று பிரதமரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த தேர்தல் காலங்களில் நாட்டு மக்களுக்கு ராஜபக்ஷ குடும்பத்தினர் வழங்கிய பொய் வாக்குறுதிகளை நம்பித்தான் அவர்களின் கட்சிக்குப் பெரும்பாலான மக்கள் வாக்களித்து அவர்களை ஆட்சிப்பீடம் ஏற்றினார்கள். ஆனால், இறுதியில் நடந்தது என்ன? எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது. ஆணை வழங்கிய மக்களே ராஜபக்ஷ குடும்ப ஆட்சி வேண்டாம் என்று போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

நானும் ராஜபக்ஷ குடும்பத்தினர் மாதிரி பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கத் தயாரில்லை. தற்போதைய பாரிய பொருளாதார நெருக்கடிக்கு இவ்வருடத்துக்குள் தீர்வு கிடைக்கும் என்று கனவிலும் நினைக்கவே கூடாது.

இம்மாதத்தின் ஆரம்பத்தில் நான் சொன்ன மாதிரி பொருளாதார நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ஒன்றரை வருடங்களாவது தேவை. அதேவேளை, சர்வதேசமும் தொடர்ந்து உதவிகளை வழங்கினால்தான் குறித்த காலப்பகுதிக்குள் நாட்டை மீட்டெடுக்க முடியும்.

நான் மீண்டும் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்ற நாளிலிருந்து நாட்டு மக்களுக்கு உண்மைநிலைவரத்தைத்தான் கூறிவருகின்றேன். எனது கருத்துக்களை எடுத்துக்காட்டி எதிரணியினர் அரசியல் நடத்துகின்றனர். பிரச்சினைகளையும், இயலாமையையும் கூறும் பிரதமர் எதற்கு என்று அவர்கள் பிரசாரம் செய்கின்றனர். இது அவர்களின் சிறுபிள்ளைத்தன அரசியலைக் காட்டுகின்றது. - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு – தொலைபேசி இலக்கம்- 076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## இலங்கை வழியில் ரஷ்யா

**சர்வதேசக் கடன்களை – இறைமை முறிகளை – கொடுப்பனவுக் கடப்பாடுகளை – மீளச் செலுத்த வழியில்லாமல் – கடனிறுக்கை தவறிய – நாடு என்ற பெயரைச் சம்பாதித்து வைத்திருக்கும் இலங்கை, அது விவகாரத்தில் ஆறுதலடையக்கூடிய ஒரு தகவல் வெளியாகியுள்ளது.**

**உலகின் மிகப்பெரிய வல்லரசுகளில் ஒன்று – ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரத்தை கொண்டிருக்கும் நாடு – கூட தனது சர்வதேசக் கடன்களை உரிய காலத்தில் மீளளிக்க முடியாது தவறியிருக்கின்றது என்பது தான் அது.**

**ஆம். ரஷ்யா தன்னுடைய 10 கோடி டொலர் கடனைச் செலுத்த வேண்டிய காலமும், அதற்கு வழங்கப்பட்ட மேலதிக சலுகைக் காலமும் கடந்தும் கூட கடனிறுக்க வழியில்லாத நிலையை ஒப்புக்கொள்ள வேண்டிய இக்கட்டுக்கு வந்துள்ளது. மேலும் அடுத்தடுத்துப் பல கடன் தொகைகள் இவ்வாறு அறவிட முடியாத நிலைக்குச் செல்லும் வாய்ப்புகள் தென்படுகின்றன.**

**இலங்கை மட்டுமல்லாமல் இந்தப் பெரிய வல்லரசான ரஷ்யா கூட இந்த இழிநிலைக்கு சென்றிருக்கின்றது என்றால் அதற்கும் காரணம் யுத்தம்தான். தேவையில்லாமல் – பொறுப்பற்ற தனமாக – யுத்தத்தில் இறங்கியதன் விளைவுதான் இது.**

**ரஷ்யா தனது சரித்திரத்தில் 104 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போது சர்வதேசக் கடனை செலுத்தத் தவறிய பின்னடைவுக்குச் சென்றிருக்கின்றது.**

**1918 இல் கம்யூனிஸ்ட்டான விளடிமீர் லெனினின் தலைமையில் ரஷ்ய ஒன்றியம் போல்ண்ட்விக் புரட்சியில் ஈடுபட்ட பின்னர், இப்படி சர்வதேசக் கடனை மீளச் செலுத்தத் தவறியிருக்கிறது. புரட்சிக்கு முந்திய ரஷ்ய பேரரசரின் சர்வதேசக் கடன் கடப்பாடுகளைத் தாங்கள் பொறுப்பேற்க முடியாது என தெரிவித்து புதிய ரஷ்யா அப்போது கடன் கொடுக்காமல் இருந்தது.**

**பொறிஸ் யெல்ட்ஸினின் ஆட்சி அதிகாரம் முடிவுற்ற 1998 இலும் இதுபோன்ற கடனிக்க முடியாத இக்கட்டை ரஷ்யா எதிர்கொண்ட போதும், அந்தப் பிரச்சினையை உள்நாட்டில் செலுத்தப்பட வேண்டிய கடனோடு ரஷ்யா தவிர்த்துக் கொண்டது அது. வெளிநாட்டு – அல்லது சர்வதேச – கடன் கடப்பாடுகளை அப்போது ரஷ்யா பெரிய கஷ்டப்பட்டு தவறாது நிறைவேற்றி தனது நாணயத்தைக் காப்பாற்றியது.**

**ஆனால், இப்போது உலக நாடுகளின் கருத்தியலை மீறி உக்ரைன் மீது போர் தொடுத்த ரஷ்யா, அதனால் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் கூட்டாக விதித்த பொருளாதாரத் தடையை எதிர்கொண்டது. அதன் மோசமான பின் விளைவுகளில் ஒன்று இப்படி சர்வதேச கடன்களை மீளச் செலுத்துவதற்கு தேவையான நிதியை சர்வதேச மட்டத்தில் ரஷ்யா திரட்ட முடியாமல் போனதாகும்.**

**இந்த நிலைமை ஏற்படாமல் தவிர்ப்பதற்கு இறுதி நேரம் வரை ரஷ்யா எடுத்த தீவிர முயற்சி பலனளிக்கவில்லை.**

**இப்படித் தனது சர்வதேசக் கடனை மீளச் செலுத்தாமல் தவறி, அதன் தொடர் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய பொருளாதார சிக்கலில் மாட்டுப்பட்டு கிடக்கும் ரஷ்யாவிடம்தான் எரிபொருளுதவி யாசகம் வேண்டி, இரு அமைச்சர்களை அங்கு அனுப்புகிறது இலங்கை.**

**'பிச்சை எடுத்ததாம் பெருமாள்; அதைப் பிடுங்கித் தின்டதாம் அனுமான்' என்ற நையாண்டிப் பேச்சுமொழி ஒன்று நம்மத்தியில் உள்ளது. அது மாதிரித்தான் இந்த முயற்சி இருக்கப்போகின்றது. ரஷ்யாவுக்கு எதிரான மேற்குலக நாடுகளின் பொருளாதார தடை நீடிக்கும் வரை அந்நாடு பொருளாதார ரீதியில் மீண்டெழுவது மிகச் சவால்தான்.**

**ஆனால் இலங்கையின் நிலைமையும் அது எதிர் கொள்ளும் சவாலும் வேறு விதமானவை.**

# ஒருகிலோ அரிசியை இலாபத்துடன் 190 ரூபாவுக்கு விற்க முடியுமாம்!

## தேசிய விவசாய சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

ஒரு கிலோ அரிசியை இலாபத்துடன சுமார் 190 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும் என தேசிய விவசாய சங்கத்தின் தலைவர் அனுராதா தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பந்துல குணவர்தனவால் முன்னர் முன்வைக்கப்பட்ட நடைமுறைச் சாத்தியமற்ற விலைச் சூத்திரம் காரணமாக நாட்டில் அரிசியின் விலை முற்றாக சிதைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் பாரிய ஆலை உரிமையாளர்களின் தேவைகளுக்கு இணங்க செயற்படுவதால் பெருமளவிலான சிறிய ஆலைகள் மூடப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அரிசிக்கான சில்லறை விலை நிர்ணயம் செய்யப்படாததன் காரணமாக சில்லறை விற்பனையாளர் அரிசியை கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின்தலைவர்அசேலசம்பத்தெரிவித்துள்ளார்.

# 15 ஆயிரம் டொலருக்கு மேல் வைத்திருந்தால் நடவடிக்கை!

## மத்தியவங்கி அறிவிப்பு

பொதுமன்னிப்புக் காலத்தின் இறுதியில், மேலதிக வெளிநாட்டு நாணயத்தை உடைமையில் வைத்திருக்கின்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற ஆளொருவரால் உடைமையில் வைத்திருக்கும் வெளிநாட்டு நாணயத் தொகையை 15 ஆயிரம் டொலரிலிருந்து 10 ஆயிரம் டொலர் அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமனான தொகைக்குக் குறைத்தல் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு கடந்த 16 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

குறித்த தொகைக்கு மேலதிகமான வெளிநாட்டு நாணயத்தை உடைமையில் வைத்திருக்கின்ற, இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற ஆள்களுக்காக கடந்த 16ஆம் திகதி முதல் செயற்படத்தக்கவாறு 14 வேலை நாள்களைக்கொண்ட பொதுமன்னிப்புக் காலம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி காலப்பகுதியின் இறுதியில் மேலதிக வெளிநாட்டுநாணயத்தை உடைமையில் வைத்திருக்கின்ற ஆள்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்கான உரிமை தங்களிடம் இருப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் வலி.வடக்கில் இன்று மரநடுகை!






வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் இன்று (திங்கட்கிழமை) காலை 7 மணிக்கு சுன்னாகம் லயன்ஸ்கழகத்துக்குப்புதியதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள லயன் க.டினேஷ் தலைமையில் மரநடுகை செயற்றிட்டம் நடைபெற்றது.

வலி.வடக்கு தெல்லிப்பழை வட்டாரம் 13 இன் பிரதேசசபை உறுப்பினரும் சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளருமாகிய லயன் சி.ஹரிகரனின் ஒழுங்கமைப்பில் தந்தை செல்வாபுரத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வலி. வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் பிரதமவிருந்தினராகக் கலந்து மரநடுகைத் திட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

இந்த செயற்றிட்டத்தில் தெல்லிப்பழை சந்தியில் இருந்து மகாஜனக் கல்லூரி வரை 25 வேம்பு, 25 நெருப்பு வாகை மற்றும் கருங்காலி ஆகிய மரங்கள் நடப்பட்டன.

இந்த நிகழ்வில் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர்களான லயன் பா.மரியதாஸ், லயன் செ.விஜயராஜ் மற்றும் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களான லயன் சிவகுமார், லயன் விசாலினி, லயன் செல்வராகினி, லயன் துஷ்யந்தன், லயன் வசிகரன் ஆகியோரும் லயன் மகாதேவாவின் குடும்ப உறுப்பினர்களும் கலந்து மரங்களை நட்டுவைத்தனர்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் உயிர் நாடியாக இருந்து அமரத்துவமடைந்தவர்களாகிய அமரர்கள் லயன் மகாதேவா - லயன் பூமாதேவி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வர் ம.பிருந்தாபனின் 50 ஆவது அகவையை முன்னிட்டு அவரது அனுசரணையில் இந்த வீதியோரத்தில் நிழல்தரு மரக்கன்றுகள் நடப்பட்டன. அதேநேரம் அவர் கல்வி கற்ற பாடசாலையாகிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வளாகத்திலும் இன்று 50 பயன்தரு மரங்கள் நடப்பட்டன.

லயன் மகாதேவா - லயன் பூமாதேவியின் புதல்வர்களால் தமது தாய் தந்தையரின் ஞாபகார்த்தமாக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு இருமாடிக் கட்டடங்கள், பன்னாலை திருஷீச்சரம் ஆலயத்துக்கு தேரும் தேர்முட்டியும் அத்துடன் அதே ஆலயத்துக்கு 1,200 கிலோ எடையுடைய லண்டனில் வடிவமைக்கப்பட்ட மிகப்பெரிய காண்டாமணி என்பன வழங்கப்பட்டுள்ளன. தற்போதும் கந்தரோடை வற்றாக்கை அம்மன் கோவிலுக்கு தேர்முட்டி அமைத்துக்கொடுக்கும் பணி இடம் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் மீதான தொடர் தாக்குதல் காரணமாக ரஷ்யாவுக்கு கூடுதல் கட்டுப்பாடு விதிக்க ஆலோசனை



கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து உருவாக்கியுள்ள 'ஜி - 7' அமைப்பின் உச்சி மாநாடு, ஜேர்மனியின் ஸ்குலோஸ் எல்மாவ் நகரில் நேற்று தொடங்கியது. தொடர்ந்து இன்றும் மாநாடு நடைபெறுகிறது. இதில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்பட 7 நாடுகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர். மாநாட்டில், பல்வேறு அமர்வுகளாக விவாதம் நடந்தது. உக்ரைன் - ரஷ்யா போர் முக்கிய இடம் பிடித்தது. 7 நாடுகளின்தலைவர்களும்உக்ரைனுக்கு ஆதரவான நிலைப்பாடு எடுத்தனர்.

உக்ரைன் - ரஷ்யா போரால் பாதிக்கப்பட்டுள்ள எரிபொருள் விநியோகத்தை சீரமைப்பது, பணவீக்க உயர்வை கட்டுப்படுத்துவது போன்றவை குறித்து விவாதிக்கப்பட்டது. எரிபொருளுக்கு விலை உச்சவரம்பு நிர்ணயிப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது. இதன்மூலம், ரஷ்யாவுக்கு லாபத்தை குறைக்க வியூகம் வகுக்கப்பட்டது. பருவ நிலை மாற்றம் பற்றியும் பேசப்பட்டது.

உச்சி மாநாட்டின் ஆரம்பத்தில் உரையாற்றிய ஐரோப்பிய பேரவையின் தலைவர் சார்லஸ் மிச்சேல் பேசுகையில், உக்ரைன் மீதான ரஷ்யா முன்னெடுக்கும் போர் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த போர் உலகத்தையே ஆபத்திற்குள் தள்ளி உள்ளது. இந்தப் போர் காரணமாக உணவு மற்றும் எரிவாயு விநியோகம் தடைப்பட்டுள்ளது. விலைகள் அதிகரித்துள்ளதுடன், உணவுப் பாதுகாப்பும் கேள்விக் குறியாகி இருக்கிறது. உக்ரைனுக்கு ஆதரவு வழங்கும் வியத்தில் ஐரோப்பிய ஒன்றியமும் ஜி 7 நாடுகளும் அசையாத ஒற்றுமையுடன் இருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியம் உக்ரைனுக்கு நிதி, மனிதாபிமான மற்றும் அரசியல் ஆதரவை தொடர்ந்து வழங்கும் என்றார்.

மாநாட்டிற்கு முன்னதாக ஜேர்மன் சான்ஷிலர் ஓலாப் ஸ்சொட்ஸ்சை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் சந்தித்து கலந்துரையாடினார். அப்போது அவர் பேசுகையில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மேற்கு உலக நாடுகள் ஒன்றுபட வேண்டும். நேட்டோவும் ஜி 7 நாடுகளும் பிளவுபடும் என ஆரம்பத்தில் இருந்தே விளாடிமிர் புடின் எண்ணிக் கொண்டிருக்கிறார். ஆக்கிரமிப்பு செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்ல அனுமதிக்கக் கூடாது என்றார்.

இதனிடையே ஜி 7 மாநாட்டில் ரஷ்ய தங்கத்தை இறக்குமதி செய்வதற்கான தடை பற்றிய அறிவிப்புகள் வெளியாகும் என தகவல் வெளியாகியுள்ளது. உக்ரைனிலிருந்து கோதுமை ஏற்றுமதியைத் தடுக்க ரஷ்யா முயல்வதால், பணவீக்கத்தை அதிகரித்து, உலகளாவிய உணவுப் பற்றாக்குறை குறித்த அச்சத்தைத் தூண்டிய போரை முடிவுக்குக் கொண்டுவர அழுத்தத்தை எவ்வாறு அதிகரிப்பது என்று ஜி 7 தலைவர்கள் ஆலோசித்து வருகின்றனர். இதனிடையே பிரிட்டன், கனடா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய 4 நாடுகள் ரஷ்யத் தங்க ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளன.

அந்தத் தடையால் ரஷ்யாவில் அரசியல் செல்வாக்குள்ள பெருஞ்செல்வந்தர்கள் நேரடியாகப் பாதிக்கப்படுவர் என்று பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் கூறினார். உலக அளவில் தங்க வர்த்தகத்தில் லண்டனுக்கு முக்கிய பங்கு உண்டு.

அதனால் தடையின் தாக்கம் உலகம் முழுவதும் உணரப்படும் என்று பிரிட்டன் குறிப்பிட்டுள்ளது. ரஷ்யாவின் பெரிய ஏற்றுமதிகளில் தங்கம் பிரதானமானது. சென்ற ஆண்டு ரஷ்யத் தங்க ஏற்றுமதியின் மதிப்பு சுமார் 15.5 பில்லியன் டொலர். ரஷ்யா மீது கடுமையான தடைகள் விதிக்கப்பட்டுள்ளதால், நிதிக் கட்டுப்பாடுகளின் தாக்கத்தைத் தவிர்க்க அங்குள்ள செல்வந்தர்கள் தங்கள் சொத்துகளைத் தங்கத்திற்கு மாற்றி வருகின்றனர். இந்த சூழலில் ஜேர்மனியில் நடைபெறும் ஜி 7 உச்சி மாநாட்டில் ரஷ்ய தங்கத்தை இறக்குமதி செய்வதற்கான தடை பற்றி அறிவிப்புகள் வெளியாகும் என்ற தகவல் பல்வேறு எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி உள்ளது.

இதனிடையே ஜி 7 மாநாட்டில் பங்கேற்குமாறு பிரதமர் மோடிக்கு ஜேர்மனி பிரதமர் ஓலாப் ஸ்கோல்ஸ் அழைப்பு விடுத்திருந்தார். அதை ஏற்று நேற்று முன்தினம் பிரதமர் மோடி ஜேர்மனிக்கு புறப்பட்டு சென்றார். நேற்று ஜேர்மனியின் முனிச் நகரை அடைந்தார். விமான நிலையத்தில் அவருக்கு இந்திய தூதரும், இந்திய வம்சாவளியினரும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

முனிச் நகரை அடைந்தவுடன் பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் "ஜி 7 நாடுகள் மாநாட்டில் பங்கேற்க முனிச்நகரைவந்தடைந்தேன். உலகதலைவர்களுடன் ஆக்கப்பூர்வமான விவாதம் நடத்த ஆர்வமாக இருக்கிறேன். பருவநிலை மாற்றம், எரிசக்தி, உணவு பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு, சுற்றுச்சூழல், பாலின சமத்துவம், ஜனநாயகம் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்படும்" என்று கூறியிருந்தார்.

பிரதமர் மோடி, பிற நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு சந்திப்புகளையும் நடத்துவார் என்று மத்திய வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் அரிந்தம் பக்சி தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியுள்ளார். இன்றைய மாநாட்டில், பருவநிலை மாற்றம், சுகாதாரம் ஆகியவை தொடர்பான ஒரு அமர்விலும், உணவு பாதுகாப்பு, பாலின சமத்துவம் ஆகியவை தொடர்பான ஒரு அமர்விலும் பிற தலைவர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடுகிறார்.

முன்னதாக வரவேற்பு நிகழ்வின்போது இந்தியர்களுடன் மோடி உரையாடினார். பிரதமருடன் அவர்கள் 'செல்பி' படம் எடுத்துக் கொண்டனர். ஜேர்மனி பயணத்தை முடித்துக்கொண்டு, பிரதமர் நரேந்திர மோடி நாளை (செவ்வாய்க்கிழமை) ஐக்கிய அரபு அமீரகம் செல்கிறார்.

# இலகு ரக விமானம் தரையில் விழுந்து நொறுங்கி விபத்து



ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேனில் இலகு ரக விமானம் தரையில் விழுந்து நொறுங்கியதில் விமான ஓட்டி உயிரிழந்தார்.

வயல்வெளி பகுதியில் விமானம் விழுந்து எரிந்து கிடப்பதாக கிடைத்த தகவலை அடுத்து அவசர சேவைகள் துறை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

60 வயதான விமானி ஓட்டிக்கு ஏதேனும் உடல் உபாதைகள் ஏற்பட்டு விபத்து ஏற்பட்டதா அல்லது வேறெதும் காரணமா என பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# லெபனானில் இடிந்து விழுந்தது அடுக்கு மாடி கட்டடம்;குழந்தை சாவு

## பலருக்கு காயம்



லெபனான் நாட்டின் வடக்கே குய்பே மாவட்டத்தில் திரிபோலி நகரில் 3 அடுக்கு மாடி கட்டடம் உள்ளது. இங்கு ஏராளமான பொது மக்கள் தங்கள் குடும்பத்துடன் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் இந்த 3 அடுக்கு மாடி கட்டடம் திடீரென பயங்கர சத்தத்துடன் இடிந்து விழுந்தது. இதில் வீடுகள் அனைத்தும் இடிந்து தரை மட்டமாகியது. பலர் உள்ளே சிக்கி கொண்டு அபய குரல் எழுப்பினர்.

இது குறித்த தகவல் உள்ளூர் பொலிஸார் மற்றும் மீட்பு படையினருக்கு தெரிவிக்கப்பட்டது. தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். அவர்கள் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து மீட்பு பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் குழந்தை ஒன்று பலியானது. பலர் இடிபாடுகளில் சிக்கி கொண்டு பலத்த காயம் அடைந்தனர். கட்டடம் இடிந்து விழுந்ததற்கான காரணம் தெரிய வரவில்லை. இந்த சம்பவம் குறித்து அறிந்த லெபனான் நாட்டு பிரதமர் (பொறுப்பு) நஜீப் மிகாடி, அடுக்குமாடி கட்டடம் இடிந்து விழுந்ததில் காயமடைந்த நபர்களுக்கு சரியான நேரத்தில் உரிய சிகிச்சை வழங்கும்படி உள்ளூர் மருத்துவமனைகளை கேட்டுக் கொண்டார். மேலும் மீட்பு பணிகளை தீவிரப்படுத்துமாறு அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டு உள்ளார்.

# ரஷ்ய அதிபர் புடின் மேல் ஆடையின்றி குதிரை சவாரி

## ஜி 7 தலைவர்கள் கேலி

ரஷ்ய அதிபர் விலாடிமிர் புடின் மேல் ஆடையின்றி குதிரை சவாரி செய்யும் படத்தை ஜி7 நாடுகளின் தலைவர்கள் கேலி செய்துள்ளனர்.

ஜி7 உச்சிமாநாட்டின்போது மற்ற தலைவர்கள்மத்தியில்நாம்ஆடைகளை கழற்றலாமா, புடினை விட நாம் அனைவரும் கடினமானவர்கள் என்பதை காட்ட வேண்டும் என்று போரிஸ் ஜான்சன் கூறியுள்ளார்.

அதற்கு ஜஸ்டின் ட்ரூடோ திறந்த மார்புடன் குதிரை சவாரி செய்யும் காட்சியை காணப் போகிறோம் என்று கேலி செய்ததாக அமெரிக்காவைச் சேர்ந்த தி ஹில் பத்திரிகை தெரிவித்துள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அ.தி.மு.க. நிர்வாகிகளுடன் எடப்பாடி ஆலோசனை பன்னீர்செல்வத்தின் பதவியை பறிக்கத் திட்டம்?

அ.தி.மு.கவில் ஒற்றை தலைமை விவகாரம் நாளுக்கு நாள் விஸ்வரூபம் எடுத்து வருகிறது. கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமியும், ஓ.பன்னீர்செல்வமும் பங்கேற்றிருந்தனர். அப்போது ஓ.பன்னீர்செல்வத்துக்கு பொதுக்குழு உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து கோஷமிட்டதால் ஓ.பன்னீர்செல்வம் பாதியிலேயே வெளியேறினார். இதனை தொடர்ந்து கடந்த 3 நாள்களாக எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்களுக்கிடையே கருத்து மோதல் வலுத்து வருகிறது.

பொதுக்குழுக் கூட்டம் முடிந்ததும் டெல்லி சென்ற ஓ.பன்னீர்செல்வம் அங்கு தேர்தல் ஆணையத்தில் முறையிட்டு இருக்கிறார் எனவும் ஒற்றை தலைமை விவகா ரத்தில் எடப்பாடி பழனிசாமி வகுக்கும் வியூகத்தை முறி யடிப்பது தொடர்பாக அவர் நிர்வாகிகள் மற்றும் சட்ட நிபு ணர்களுடன் ஆலோசனை நடத்தினார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் ஓ.பன்னீர்செல்வத்துக்கு அழைப்பு விடுக்காமல் எடப்பாடி பழனிசாமியின் ஆதரவாளர்கள் ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை கழகத்தில் தலைமை கழக நிர்வாகிகள் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இது தொடர்பான அறிவிப்பு நேற்று மாலை வெளியிடப்பட்டது. வழக்கமாக அ.தி.மு.க. தலைமை கழகம் சார்பில் வெளியிடப்படும் அறிவிப்புகளில் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் இருவரின் பெயர்களும் இடம்பெற்றிருக்கும். ஆனால், தலைமை கழக நிர்வாகிகள் கூட்டத்துக்கான அறிவிப்பை தலைமை நிலைய செயலாளர் வெளியிட்டிருந்தார்.

இதன்படி இன்று காலை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை கழகத்தில் கழக நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மற்றும் தலைமை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். சுமார் 70 பேர் வரை கூட்டத்தில் பங்கேற்றனர். இந்த கூட்டத்தில் அ.தி.மு.கவில் நிலவும் தற்போதைய பிரச்சினை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்துக்குபின்னர்பேட்டிஅளித்தஎடப்பாடிபழனிசாமியின் ஆதரவாளரான முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், அ.தி.மு.கவில் ஒருங்கிணைப்பாளர்கள் பதவி காலாவதியாகிவிட்டதாக அறிவிப்பு வெளியிட்டார். இதனால் தற்போது ஓ.பன்னீர்செல்வம் முன்னாள் ஒருங்கிணைப்பாளர் என்றும் அவர் பொருளாளராக மட்டுமே உள்ளார் என்றும் கூறி இருந்தார். இந்த நிலையில் ஓ.பன்னீர்செல்வத்திடமிருந்து பொருளாளர் பதவியையும் பறிக்க எடப்பாடி பழனிசாமியின் ஆதரவாளர்கள் முடிவு செய்திருக்கின்றனர் என தகவல்கள் வெளியாகி உள்ளன. இன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இதுபற்றியும் ஆலோசிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.



# நித்யானந்தா ஆச்சிரமத்தில் இளம்பெண் அடைத்து வைப்பு? திருவண்ணாமலை பொலிஸார் சோதனையில் ஏமாற்றம்



பெங்களூர் பகுதியைச் சேர்ந்த நாகேசும் அவரது மனைவி மற்றும் 2 மகள்கள் ஆகியோர் கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் கர்நாடக மாநிலத்தில் பிடதி பகுதியில் உள்ள நித்யானந்தா ஆச்சிரமத்தில் பல்வேறு சேவைகளை செய்து வந்துள்ளனர். 2019 ஆம் ஆண்டு நாகேஷ் அவரது மனைவி மற்றும் மூத்த மகள் ஆகியோர் ஆச்சிரமத்தில் இருந்து வெளியேறியபோதும் இரண்டாவது மகள் மட்டும் ஆச்சிரமத்தில் தங்கி தொடர்ந்து சேவை செய்து வந்துள்ளார் என கூறப்படுகிறது.

அவ்வப்போது ஆச்சிரமத்திற்கு நேரில் சென்று நாகேஷ் அவரது மகளை பார்த்து விட்டு வந்த நிலையில், கடந்த சில மாதங்களாக அவரது மகளை பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அப்போது பிடதியில் ஆச்சிரமத்தை தொடர்பு கொண்டு தனது மகளை காண்பிக்குமாறு கேட்டுள்ளார். அந்த சமயத்தில் கைப்பேசி மூலம் வீடியோ அழைப்பில் நாகேஷ் மகளுடன் உரையாடி வந்துள்ளார். அதன்பிறகு தனது மகளை தொடர்பு கொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து பிடதி ஆச்சிரமத்தில் உள்ள தனது மகளை மீட்டுத் தருமாறு கர்நாடக காவல்துறையில் கடந்த சில நாள்களுக்கு முன்பு அவர் புகார் அளித்துள்ளார். இந்த நிலையில், பிடதி ஆச்சிரமத்தில் இருந்து நாகேஷின் மகள் வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார் என நாகேஷுக்கு தகவல் கிடைத்ததையடுத்து, இதனால் அவர் தனது மகளை பல இடங்களில் தேடியுள்ளார்.

திருவண்ணாமலை கிரிவலப்பாதை அடி அண்ணாமலையில் உள்ள நித்யானந்தா ஆச்சிரமத்தில் நாகேஷின் மகள் இருக்கிறார் என அவருக்கு தகவல் கிடைத்துள் ளது. இதையடுத்து நாகேஷ் திருவண்ணாமலை தாலுகா பொலிஸில் தனது மகளை மீட்டுத்தருமாறு புகார் செய்தார். இந்த புகாரின் பேரில் நேற்று இரவு தாலுகா காவல்துறை இன்ஸ்பெக்டர் ஹேமாமாலினி தலைமையில் பொலிஸார் நித்யானந்தா ஆச்சிரமத்திற்கு நாகேஷ் மற்றும் அவரது மனைவியுடன் நேரில் சென்று சோதனை நடத்தினர். அங்கு அவரது மகள் இல்லை என்பது தெரியவந்துள்ளது.



# ஒன்லைன் ரம்மி விளையாட்டை தடை செய்ய விரைவில் சட்டம்

ஒன்லைன் ரம்மி குறித்து ஆராய்ந்து இரண்டு வார காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தமிழக அரசு கடந்த 10 ஆம் திகதி குழுவொன்றை அமைத்திருந்தது. ஓய்வுபெற்ற நீதியரசர் சந்துரு தலைமையில் அமைக்கப்பட்ட அந்தக் குழு, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் இன்று தலைமைச் செயலகத்தில் நேரில் அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது.

அதன் அடிப்படையில் ஒன்லைன் ரம்மி விளையாட்டை தடை செய்வதற்கான அவசர சட்டம் விரைவில் பிறப்பிக்கப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக அரசு அமைத்த ஆய்வுக்குழுவினர், ஒன்லைன் விளையாட்டுகள் உண்மையிலேயே திறன்களை வளர்க்கின்றனவா?, ஒன்லைன் விளையாட்டு தொடர்பான விளம்பரங்களை தடை செய்வது எவ்வாறு?, ஒன்லைன் விளையாட்டுக்களால் ஏற்படும் உயிரிழப்புகள் - நிதி இழப்புகள் எவ்வளவு?, இணைய வழிப் பணப்பரிவர்த்தனையை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டும்?, ஒன்லைன் விளையாட்டைத் தடை செய்வது தொடர்பான சட்ட மசோதாவை உருவாக்குவதற்கான காரணங்கள் எவை? என்பவை குறித்து ஆராய்ந்துள்ளனர்.

குறித்த ஆய்வுகளின் முடிவுகளை முதல்வரிடம் அறிக்கையாக தற்போது கொடுத்துள்ளனர். இந்தக் குழுவிற்கு தேவையான வசதிகளை தமிழக காவல்துறை டி.ஜி.பி. மற்றும் சென்னையில் உள்ள உயர் அதிகாரிகள் செய்து கொடுத்துள்ளார்கள். ஒன்லைன் ரம்மி தொடர்பாக நீதிபதி சந்துரு குழுவின் பரிந்துரை அறிக்கை பற்றி தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் மிக விரைவில் ஆலோசிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் வனவிலங்குகள் கணக்கெடுக்கும் பணி

சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் சத்தியமங்கலம், விளாமுண்டி, பவானிசாகர், ஆசனூர், தாளவாடி, கெட்டவாடி, கேர்மாளம், தலமலை, கடம்பூர், டி.என். பாளையம் என 10 வனசரகங்கள் உள்ளன. இந்த வனப்பகுதியில் சிறுத்தை, புலி, யானை, மான், செந்நாய் உள்ளிட்ட ஏராளமான வன விலங்குகள் வசித்து வருகின்றன.

இந்தக் காப்பகத்தில் உள்ள வனசரகங்களில் வன விலங்குகள் கணக்கெடுக்கும் பணி இன்று தொடங்கி வருகின்ற ஜூலை இரண்டாம் திகதி வரை 6 நாள்கள் நடக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் 2 நாள்கள் நேர்கோட்டு பாதையிலும், அடுத்த 2 நாள்கள் தாவர உண்ணிகளையும், அடுத்த 2 நாள்கள் மாமிச உண்ணிகளையும் கணக்கெடுத்து சென்னை வனத்துறை தலைமை அதிகாரிக்கு அனுப்ப உள்ளனர்.

இதன் முதல் பகுதியாக இன்று காலை சத்தியமங்கலம் வன சரகத்தில் உதவி வன பாதுகாவலர் யோகேஷ் குலால் தலைமையில் வனவர் தீபக்குமார் உள்ளிட்ட துப்பாக்கி ஏந்திய 6 பேர் கொண்ட குழு ரேடார் கருவிகள், ஜி.பி.எஸ். கருவி போன்ற நவீன உபகரணங்களைக் கொண்டு பண்ணாரில் இருந்து தொடங்கி வன விலங்குகளை கணக்கெடுத்து வருகின்றனர்.

# தேயிலைக்கு உரிய விலை வழங்க கோரி நீலகிரியில் விவசாயிகள் போராட்டம்



நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. சிறு, குறு தேயிலை விவசாயிகள் 65 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர். கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் அதிகளவில் விவசாயிகள் தேயிலை பயிரிட்டுள்ளனர். அவர்கள் தங்கள் தோட்டங்களில் விளையும் பச்சை தேயிலைகளை பறித்து தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இதற்காக தேயிலை வாரியம் விலை நிர்ணயித்துள்ள போதிலும் தேயிலை தொழிற்சாலைகளில் தேயிலை வாரியம் நிர்ணயித்த விலையில் விவசாயிகளிடம் இருந்து தேயிலையை கொள்முதல் செய்வதில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். அந்தந்த தேயிலை தொழிற்சாலைகள் தங்களுக்குள்ளாகவே ஒரு விலையை நிர்ணயம் செய்து, விவசாயிகளிடம் இருந்து தேயிலை பெற்று வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

உரிய விலை கிடைக்காததால் சில விவசாயிகள் பறித்த தேயிலைகளை சாலையோரம் மற்றும் தோட்டங்களிலும் கொட்டி வரும் நிலை காணப்படுகிறது. இந்த நிலையில், பச்சை தேயிலையை உரிய விலைக்கு கொள்முதல் செய்ய வலியுறுத்தியும், தேயிலை வாரியத்தை கண்டித்தும் அரவேணு, கோத்தகிரி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள தேயிலை விவசாயிகள் தங்கள் வீடுகளில் கறுப்பு கொடி கட்டி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அங்குள்ள அனைத்து வீடுகளிலும் கறுப்பு கொடி கட்டப்பட்டுள்ளது. இதேபோல் தும்மனட்டி, கக்குச்சி பகுதிகளில் தேயிலைக்கு உரிய விலை கேட்டு விவசாயிகள் ஊர்வலமாக பேரணி வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# பதின்மூன்றாயிரம் லீற்றர் பெற்றோலையும் பழைய விலைக்கே விநியோகித்த நிலையம்

## மட்டக்களப்பில் மனிதாபிமானச் செயற்பாடு






(சுதா)

மட்டக்களப்பு நகரில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு நேற்று அதிகாலை 13 ஆயிரம் லீற்றர் பெற்றோல் கொண்டு வரப்பட்டுள்ளது. விலை அதிகரிப்புப் பற்றிய அறிவிப்பு வந்த பின்னரும் அவற்றைப் பழைய விலைக்கே அனைவருக்கும் விநியோகித்து முடித்தார் நிலைய உரிமையாளர். அதனால் எல்லோரும் அவரைப் பாராட்டி மெச்சினர்.

மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலை கொள்வனவு செய்வதற்காக கடந்த இரவு முழுவதும் வாகனங்கள் சகிதம் பொது மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்த நிலையில் நேற்று அதிகாலை பெற்றோல் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நிலையில் எரிபொருள்களின் விலைகள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் பெற்றோலின் விலையானது 50 மற்றும் 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த இரவு முழுவதும் காத்துக் கிடந்த மக்களது கஷ்ட நிலையினை உணர்ந்த மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவரும், மட்டக்களப்பு ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளருமான முத்துக்குமார் செல்வராசா பழைய விலைக்கே தனது எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட பெற்றோலை விற்பனை செய்துள்ளார்.

இந்நிலையில் குறித்த ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 92 ஒக்டேன் பெற்றோலை பழைய விலையான 420 ரூபாவிற்கும், 95 ஒக்டேன் பெற்றோலை பழைய விலையான 450 ரூபாவிற்குமே அவர் விநியோகம் செய்துள்ளார்.

அதேவேளை குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதகுருமாருக்கும், கடந்த 5 நாள்களாக எரிபொருள் இன்றி தமது சேவையை வழங்க முடியாதிருந்த மட்டக்களப்பு மாநகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அடங்கலாக ஐம்பது பேருக்கும் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை வழங்கியமையானது சிறந்ததொரு மனிதாபிமான செயற்பாடாக மட்டக்களப்பு மக்களால் பார்க்கப்பட்டது. அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரான முத்துக்குமார் செல்வராசாவை எரிபொருள் நிலையத்திற்கு வருகை தந்த மதகுருமார், பொதுமக்கள்,ஒட்டோ சாரதிகள் மற்றும் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் உள்ளிட்டோர் பாராட்டி நன்றியும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தினரும், பொலிஸாரும் கடமையில் ஈடுபட்டிருந்தமையுடன், சீரான முறையில் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது.

# ஒரு குடும்பத்தினருக்காக 2 கோடி மக்கள் சாவதா?

## காரைதீவு தவிசாளர் ஜெயசிறில் கேள்வி

( காரைதீவு நிருபர் சகா)

நாட்டிலேயே ஒரு குடும்பம் வாழ்வதற்காக 2 கோடி மக்கள் செத்துக் கொண்டிருக்கின்றனர். அந்த ஒரு குடும்பத்தின் அராஜக ஆட்சி வழிநடத்தலில் ஏற்கனவே தமிழ் மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்தனர். இன்று முழு நாட்டு மக்களும் அவர்களது ஆட்சியில் பசி,பட்டினியால் சீரழிந்து கொண்டிருக்கிறார்கள்.

– இவ்வாறு காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் முன்னாள் தளபதிகளில் ஒருவரான அமரர் மகாதேவன் சிவனேசனி ஒரு ஆண்டு நிறைவு நிகழ்வு காரைதீவு விபுலானந்த மைதானத்தில் மாவட்ட அமைப்பாளர் சங்கரி தோழர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் –

ஒரு குடும்பம் வாழ வேண்டும் என்பதற்காக இன்று நாட்டு மக்கள் அனைவரும் பசி பட்டினியோடு வரிசையில் காத்து இருக்கிறார்கள் .

அவரை ஆட்சிப் பீடம் அமர்த்திய அதே மக்கள் இன்று “வீட்டுக்குப் போ” என்று பரவலாக ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

அவர் அதனை கண்டு கொள்ளாமல் இறுமாப்புடன் பதவி விலகாமல் மக்களை மேலும் மேலும் வதைத்து கொண்டிருக்கிறார்.

1990களில் தமிழர்கள் ஒரு லீற்றர் பெற்றோல் வாங்க 1,500 ரூபா செலவழித்தார்கள். அதுமாத்திரமல்ல வரிசை என்பது அவர்களுக்கு அத்துப்படி.

எனவே தமிழர்கள் எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளக் கூடியவர்கள் .

இன்று நாடு அழுதுகொண்டே காலத்தைக் கடத்துகிறது. ஒரு குடும்பம் வாழ்வதற்காக – அவர்களைக் காப்பாற்ற வந்த நரி வாழ வேண்டும் என்பதற்காக – இரண்டு கோடி மக்களையும் கொன்று கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் வீட்டுக்கு போனால் நாட்டுக்கு நன்மை கிடைக்கும்.

தமிழர்களை கொல்ல எந்த நாடுகளில் பணம் பெற்றார்களோ அதே நாடுகள் இன்று இவர்களை ஒதுக்குகிறது.

இன்று இவர்களின் அராஜகம் காரணமாக நாடு பெற்ற கடனை அடைக்க முடியாமல் திண்டாடுகின்றது. தமிழர்கள் நினைத்தால் இந்த கடனை அடைப்பதற்கு நிச்சயமாக உதவ முடியும். எமது புலம்பெயர் தமிழ் மக்கள் ஒரு கணம் நினைத்தால் இதனை அடைப்பது பெரிய விடயமல்ல.

ஆனால், இவர்கள் வீட்டுக்கு போகவேண்டும். வடக்கு, கிழக்கில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுதந்திரத்தை இந்த அரசு வழங்குமானால் நாடு இந்த கடனை அடைக்க அவர்களால் முடியும் என்பதை தெரிவித்து கொள்கிறேன். – என்றார்.

# ஸ்கூட்டியில் வந்த தாயையும் மகளையும் தள்ளி விழுத்தி கழுத்துச் சங்கிலி அறுப்பு

திருகோணமலை - உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள மாங்காய் ஊற்று பகுதியில் ஸ்கூட்டியில் வந்த தாயையும் மகளையும் தள்ளிவிட்டு விட்டு தாயின் கழுத்தில் இருந்த தங்க ஆபரணத்தை அபகரித்துச் சென்ற சம்பவமொன்று நேற்றுக் காலை பதிவாகியுள்ளது.

சம்பவத்தில் தாயும், மகளும் காயங்களுக்கு உள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கன்னியா மாங்காய் ஊற்று பகுதியைச் சேர்ந்த எம்.சுவிஸ்மா (35வயது) மற்றும் அவரது மகள் ஹரிஸ்டிகா (10வயது) ஆகியோரே பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் ஒரு வாரத்தில் மாத்திரம் 30க்கும் மேற்பட்ட திருட்டு மற்றும் அபகரிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் நாளுக்குநாள் வெவ்வேறு கோணங்களில் திருட்டு, அபகரிப்புச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயல்பட வேண்டும் எனவும், அறிமுகமில்லாத புதிய நபர்கள் தங்களது பிரதேசங்களில் சுற்றித் திரிந்தால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறும் பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கல்முனைப் பிரதேச ஓட்டோக்கள் எரிபொருள் வழங்கலுக்காகப் பதிவு

## மாநகரசபை விசேட நடவடிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர பிரதேசங்களிலுள்ள அனைத்து ஓட்டோக்களுக்கும் இலகுவாகப் பெற்றோலை விநியோகிக்கும் பொருட்டு, அவற்றுக்கு விசேட அனுமதிப்பத்திரம் (பாஸ்) வழங்கும் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுகின்றது. அதற்காக அவற்றை கல்முனை மாநகர சபையில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோக செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி, நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கல்முனை மாநகர சபையில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக இப்பதிவு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்காக குறித்தொதுக்கப்பட்டிருக்கின்ற பின்வரும் தினங்களில் பயணிகள் சேவையில் ஈடுபடுகின்ற ஓட்டோக்களினதும் தனிப்பட்ட பாவனையில் உள்ள ஓட்டோக்களினதும் உரிமையாளர்கள் அல்லது பாவனையாளர்கள் மோட்டார் திணைக்கள பதிவுப் புத்தகத்தின் பிரதியுடன் கல்முனை பொது நூலக வளாகத்தில் அமைந்துள்ள மாநகர சபை அலுவலகத்திற்கு வருகைதந்து, அதனைப் பதிவு செய்து கொள்ள முடியும் என அறிவிக்கப்படுகிறது.

இதன்படி இன்று திங்கள் மற்றும் நாளை செவ்வாய் ஆகிய இரு தினங்களும் சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள ஓட்டோக்களும் புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களும் கல்முனை பிரதேசத்திலுள்ள ஓட்டோக்களும் பதிவு செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் பாண்டிருப்பு, மணற்சேனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களிலுள்ள ஓட்டோக்களும் ஞாயிறு மற்றும் அடுத்த திங்கள் ஆகிய இரு தினங்களும் மருதமுனை, பெரிய நீலாவணை ஆகிய பிரதேசங்களிலுள்ள ஓட்டோக்களும் பதிவு செய்யப்படும் என கல்முனை மாநகர சபை அறிவித்துள்ளது.

அவரவருக்கு ஒதுக்கப்பட்ட தினங்களில் மாத்திரம் வருகைதந்து, பதிவு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சம்பந்தப்பட்டவர்களை மாநகர சபை கேட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பெருந்தோட்டக் காணிகளின் பகிர்வு தொடர்பாக அரசியல் ஸ்திரமற்ற நிலையில் பேசுவது ஆபத்தே!

## வேலுகுமார் எம்.பி. கூறுகிறார்

அரசியல்ஸ்திரமற்றநிலையில்தோட்டக்காணிகளின் பகிர்வு தொடர்பாக பேசுவது ஆபத்தானதாகும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இன்று, நாட்டின் அரசாங்கம் யாருடையது, யாருடைய தலைமையில்,கட்டுப்பாட்டில் அரசாங்கமும், அரச நிர்வாகமும் செயற்படுகின்றன என்பன தெளிவற்ற நிலையிலேயே உள்ளது.

ஜனாதிபதி பங்கரில் இருந்துகொண்டு தனது நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் முயற்சியில் உள்ளார். பிரதமர் தனது கட்சிசார்ந்த சகாக்களைச் சேர்த்துக்கொண்டு தனது கட்சியின் நிகழ்ச்சிநிரலை முன்னெடுப்பதில் உள்ளார். இவ்வாறான அரசியல் ஸ்திரமற்ற நிலையில் தோட்டக் காணிகளின் பகிர்வு தொடர்பாகப் பேசுவது ஆபத்தானதாகும்.

இன்றுநாட்டில்ஜனநாயகரீதியாகதெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சியொன்று இல்லை. மக்கள் பிரதிநிதிகள் பெயரளவில் சிலரின் பிடிகளுக்கு உட்பட்டவர்களாகவே உள்ளனர். நாடாளுமன்றத்தில் ஒரே ஓர் ஆசனத்தை வைத்திருந்த ரணில் விக்கிரமசிங்க பிரதமராக உள்ளார். அவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட, தனது கட்சியின் சில சகாக்களை முன்னிலைப்படுத்தி தனது வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். இவ்வாறான சூழ்நிலையில் மக்கள் பிரதிநிதிகள் ஓரங்கட்டப்பட்ட நிலையிலேயே உள்ளனர். இதனைச் சுட்டிக்காட்டுவதற்கே கடந்த வாரத்தில் எதிர்க்கட்சியான நாம் நாடாளுமன்றத்தை பகிஷ்கரிப்பு செய்திருந்தோம்.

மலையக பிரதேசங்களில் உள்ள பயிரிடப்படாத தோட்டக் காணிகள் என்பது பல காலமாக பேசப்பட்டு வரும் ஒரு விடயம். இன்று நாட்டிலே ஏற்பட்டிருக்கும் உணவு பஞ்சத்துடன் மீண்டும் இந்த விடயம் பேசப்படுகின்றது.

கடந்த காலம் முழுவதும் தோட்டக் காணிகளின் பகிர்வில் தோட்ட மக்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டு வந்துள்ளது. எல்லா பகுதிகளிலும் போல வெளியாருக்கே பெருமளவு நிலங்கள் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

இந்தச் சூழ்நிலையில் இன்றைய அரசாங்கத்தில் மலையக பிரதிநிதிகள் எவரும் இல்லை. இருந்த சிலர் சுயாதீனமாகிவிட்டனர் என கூறுகின்றனர். அரச தலைமைத்துவம் யாருடையதென்பது என்பதும் கேள்விக்குறியாக உள்ளது. இந்தச் சூழ்நிலையில் தோட்டக் காணிகளின் பகிர்வு பற்றி பேசுவது நாமே எம்மைக் காட்டிக் கொடுப்பது போன்றதாகிவிடும்.

இன்றைய அரசாங்கத்துக்கு எவ்வித அபிவிருத்தி வேலைகளையும் முன்னெடுக்க முடியவில்லை. மாவட்ட ரீதியில் உள்ள அரசாங்கப் பிரதிநிதிகள் தங்களது சகாக்களை திருப்திப்படுத்துவதற்கு இதனை பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு தாராளமாக உள்ளது.

தற்போதே கண்டி மாவட்டத்தில் கலபோட தோட்டம், தெல்தோட்டை தோட்டம், போஹில் தோட்டம் மற்றும் கிரேட் வெளி தோட்டங்களிலான பெருவாரியான நிலங்கள் வெளியாருக்கு கொடுக்கும் ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துள்ளது. அதே போன்று வுட்சைட் தோட்டம், கல்தூரியா தோட்டம் போன்றவைகளின் காணி சுவீகரிப்பு தொடர்பாகவும் பல முரண்பாட்டு நிலைமை உள்ளது.



இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தி, தோட்ட காணிகளைப் பாதுகாத்து, தோட்ட மக்களின் வாழ்வாதாரத்துக்கு அவற்றை வழங்க வேண்டும். அதை விடுத்து இன்று நிலவும் பலவீனமான அரசியல் சூழலில் தோட்ட காணிகளின் பகிர்வுக்கு முற்படுவது பெரும்பான்மை அரசியல் பிரதிநிதிகளின் நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றிக்கொள்ளவே வாய்ப்பாக அமையும். கொழும்பில் இருந்து திட்டங்களை பேசலாம், முடிவுகளை எடுக்கலாம்.

ஆனால், அவை பிரதேச மட்டத்தில் செயற்பாட்டிற்கு வருகின்ற போது, கட்சி அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் எனப் பல்வேறு கெடுபிடிகள் உருவாகும். அவற்றையெல்லாம் மீறி தோட்ட காணிகளை தோட்ட மக்களுக்கே பயிரிட வழங்கக்கூடிய சூழல் இன்று இல்லை.

இன்று தோட்ட மக்களை பாதுகாக்க விசேடமான நிவாரண திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும். அதனையே நாம் வலியுறுத்த வேண்டும். மாறாக பயிரிடாத காணிகளைப் பற்றிப் பேசுவது, நாமே ஆபத்தை தேடிக்கொள்வதாகும். - என்றார்.

# எரிபொருள்கள் இன்றி முழுநாடும் ஸ்தம்பிக்கும் விளிம்பில் உள்ளது!

## அநுரகுமார சுட்டிக்காட்டு

நாட்டுக்கு கடந்த வாரம் வரவிருந்ததாகக் கூறப்பட்ட எரிபொருள் கப்பல் தற்போது இந்தியாவிலுள்ளது.

முறையான விலை மனு கோரலின் அடிப்படையில் முன்பதிவு செய்யப்படாத இந்த கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடையுமா இல்லையா என்பது சந்தேகத்திற்குரியது.

இதனால் முழு நாடும் ஸ்தம்பிக்கக் கூடிய விளிம்பில் இருப்பதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கடந்த 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன என வலுசக்தி அமைச்சர் கடந்த வாரம் தெரிவித்தார்.

எந்தவொரு கப்பலும் நாட்டை வந்தடையவில்லை. தற்போது அந்த கப்பல் இலங்கையின் எல்லையைத் தாண்டி கிருஸ்ணபட்டணம் பகுதிக்குச் சென்றுள்ளது.

இலங்கைக்கு வருகை தந்த கப்பல் தற்போது இந்தியாவிலுள்ளது. இது உரிய விலைமனு கோரலின் அடிப்படையில் வரவழைக்கப்பட்ட கப்பல் அல்ல.

அவசர இறக்குமதியாளர்கள் ஊடாக நடுக்கடலில் காணப்பட்ட கப்பலே இவ்வாறு வரவழைக்கப்பட்டது. மேற்படி கப்பல் இலங்கைக்கு வருமா இல்லையா என்பது பெரும் சந்தேகத்திற்குரியதாகவுள்ளது.

எனவே முழு நாடும் ஸ்தம்பிதமடையக் கூடிய விளிம்பில் நாம் உள்ளோம். அமெரிக்காவிலுள்ள வங்கியொன்றின் பிணைமுறிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

அவை ஜூலை 18 ஆம் திகதி காலாவதியாகவுள்ளன. இவ்வாறிருக்க அரசாங்கம் கடனை மீள செலுத்த முடியாது என அறிவித்துள்ளது. இதன் காரணமாக அரசாங்கத்துக்கு எதிராக அமெரிக்க ரிசேர்வ் வங்கி வழக்கு தாக்கல் செய்துள்ளது.

ராஜபக்ஷ குடும்பம் மக்களின் சொத்துக்களை கொள்ளையடித்துள்ளதாக அந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை சீசெல்ஸ் போன்ற வரி சலுகை வழங்கப்படும் நாடுகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு , 'ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி நரகங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலை விட மோசமானது என்று பொருளாதார நிபுணர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.



இன்று முழு நாடும், பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ளது. எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளனர்.

இளைஞர்களின் எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கையற்ற நிலைமையைத் தோற்றுவித்துள்ளனர். விவசாயிகள், மீனவர்கள், அரச சேவைகள் என அனைத்தும் முடங்கியுள்ளன. இடைக்கிடை பாடசாலைகளை மூடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது என்ன நாடு? இதனை நாம் மாற்ற வேண்டாமா?

ஆட்சியாளர்கள் இதற்குப் பொறுப்புகூற வேண்டாமா? இது இயற்கையாக தோற்றம் பெற்ற அழிவு அல்ல. வெள்ளம் அல்லது சூறாவளியால் உருவான அழிவல்ல இது. நாட்டை இந்த நிலைமைக்கு உள்ளாக்கியுள்ள ஆட்சியாளர்களைப் பதவி நீக்குவதற்கு எவ்வித பேதமும் இன்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். - என்றார்.

# கொரோனாவின் புதிய பிறழ்வு இங்கு கண்டறியப்படவில்லை!

கொரோனா வைரஸின் புதிய பிறழ்வான பி.ஏ.5 இலங்கையில் கண்டறியப்படவில்லையென ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறையின் தலைவர் வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

நாட்டில் புதிய வைரஸ் எதுவும் கண்டறியப்படவில்லை என அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் பி.ஏ.5 என்று பெயரிடப்பட்ட இந்த வைரஸைத் தான் உன்னிப்பாக கவனித்து வருகிறேன் என அவர் கூறினார்.

இந்த புதிய வைரஸ் 63 நாடுகளில் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மற்ற வைரஸ்களை விட இந்த வைரஸ் மிக வேகமாக பரவுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அதிக பணவீக்கம் பதிவாகிய நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு 2 ஆவது இடம்!

அமெரிக்காவின் ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான ஸ்டீவ் ஹான்கி, அதிக பணவீக்கம் பதிவாகிய நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர் ஸ்டீவ் ஹான்கேயின் மதிப்பீட்டின்படி, உலகில் வருடமொன்றுக்கு அதிக பணவீக்கம் விகிதம் பதிவாகிய நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது.

அறிக்கையின்படி, சிம்பாப்வே முதலிடத்தில் இருக்கும் அதேவேளை, துருக்கி இலங்கைக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்திலும் லெபனான் 4 ஆவது இடத்திலும் உள்ளது.

# எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சர்கள் இருவர் ரஷ்யாவுக்கு!

கொழும்பு, ஜுன் 27

எரிபொருள் பெற்றுக் கொள்வது தொடர்பில் கலந்துரையாடல் நடத்துவதற்காக அமைச்சர்கள் இருவர் ரஷ்யாவிற்கு பயணமாகவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி இரண்டு அமைச்சர்களும் இன்று (திங்கட்கிழமை) ரஷ்யா செல்லவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிடம் இருந்து இலங்கை எரிபொருள் பெற மறுப்பது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மற்றுமொரு இராஜதந்திர விவகாரத்துக்கு விஜயமொன்றை மேற்கொள்வதாகவும் இதன் போது இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.06.2022இல் வெளியிடப்பெற்றது.